# அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்
## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)
## அவர்கள் இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில்
## 15.01.2010 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரை

**தஷஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹா ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் சூரா அத்தகாபுன் -ன் 9 வது வசனத்தை ஓதினார்கள்:**

**ஃபஆமினூ பில்லாஹி வரஸூலிஹீ வன்னூரில்லஸீ அன்ஸல்னா. வல்லாஹு பிமா தஃமலூன (kh)கபீர்** – எனவே நீங்கள் அல்லாஹ்விடத்தும், அவனது தூதரிடத்தும், நாம் இறக்கிய ஒளியி(ன், அதாவது குர்ஆனி)னிடத்தும் நம்பிக்கை கொள்ளுங்கள். நீங்கள் செய்பவற்றை அல்லாஹ் நன்கு அறிபவனாவான். (64:9)

அல்லாஹ் தனது அடியார்களுக்கு செய்த பெருங்கருணையால் படைப்பினங்களுள் சிறந்த படைப்பாக மனிதனை ஆக்கியுள்ளான். அவனுக்கு இறைவன் சிந்தனைத்திறன் என்ற சிறப்புத்தன்மையை வழங்கியிருப்பதால் அவன் (மனிதன்) மற்ற படைப்பினங்களை தனது அதிகாரத்தின் கீழ் கொண்டு வருவது மட்டுமின்றி அவற்றிலிருந்து சிறந்த பயனையும் பெறுகிறான்.

ஒவ்வொரு புதிய நாளிலும் புதிய புதிய கண்டுபிடிப்புகள் இத்திறமையின் காரணத்தால் நமக்கு கிடைத்துக் கொண்டிருக்கின்றன. இன்றிலிருந்து 10 வருடம் முன்பு இன்றிருந்த முன்னேற்றம் இருந்ததில்லை. 10 வருடம் முன்பு இருந்த முன்னேற்றம் 20 வருடங்களுக்கு முன்பு இருந்ததில்லை.

அதுபோன்ற புதிய புதிய கண்டுபிடிப்புகளை வைத்து, நாம் மனித மூளையின் ஆற்றலை மதிப்பிடலாம். ஆனால் இந்த பௌதீக முன்னேற்றம்தான் அவனது பிறப்பின் நோக்கமா என்ன?

ஒவ்வொரு காலத்தின் உலகியல் சார்ந்த மனிதனும் இதனைத்தான் தனது வாழ்வின் இலட்சியமாக கருதுகிறான். உலகியல் சார்ந்த முன்னேற்றம், உலக ஆடம்பரங்களில் மூழ்குதல், எனது செல்வம் மூலம் எனக்கு கீழ் இருப்பவர்கள் மீது எனது மேன்மையை எடுத்துக்கூற வேண்டும் என்ற சிந்தனை, தமது செல்வத்தை தனது பௌதீக நிம்மதிக்கு காரணமாக ஆக்குதல், தமது ஆற்றலால் அடுத்தவரை தனக்கு கீழ் கொண்டு வர வேண்டும் என்பதையே இலட்சியமாக கருதுகிறான். செல்வமில்லாத உலகவாதிகளும், இக்கால இளைஞர்களும் கூட இக்காலத்தின் தொலைக்காட்சி, இன்டெர்நெட் போன்றவைதான் முன்னேற்றத்திற்கு பெரிதும் உறுதுணையாக இருப்பவை என்று கருதுகின்றனர். இதனால் பெரிதும் தாக்கத்திற்கு உள்ளாகி இருக்கின்றனர். இது மிகவும் தவறான கற்பனையாகும். இந்த கற்பனை பல குழப்பவாதிகளையும் அநீதி இழைக்கக்கூடியவர்களையும் உருவாக்கி விட்டது. இந்த கற்பனையே உல்லாசத்தில் மூழ்கிக் கிடப்பவர்களை உருவாக்கி விட்டது. இந்த கற்பனையே ஒவ்வொரு காலத்திலும் ஃபிர்அவ்னை உருவாக்கியது. நம்மிடம் செல்வம், மகத்துவம் எல்லாம் இருக்கிறது என்ற பிரமையை உருவாக்கியது. ஆனால் இந்த கற்பனையை, உலகங்களின் இறைவன் மிக ஆணித்தரமாக மறுத்துள்ளான்.

உங்கள் வாழ்வின் இலக்காக எதனை நீங்கள் கருதுகிறீர்களோ அது வாழ்வின் இலக்கல்ல. இந்த பௌதீக பொருட்களிலிருந்து பயன் பெற்றவாறே உலகத்தை விட்டு விடை பெற்றுச் சென்று விடலாம் என்பதன்று. மாறாக, இறைவன் கூறுகிறான்:

**மா (k)கலக்(த்)துல் ஜின்ன வல் இன்ஸ இல்லா லியஃபுதூன்** – நான் ஜின்களையும், மனிதர்களையும் என்னை வணங்குவதற்காகவே படைத்துள்ளேன். (51:57)

மனிதன் படைக்கப்பட்டதன் அசல் நோக்கம், அவன் தனது ரப் –ஐ கண்டறிவது தான். அவனுக்கு கட்டுப்பட வேண்டும். அதனையே **மா [k]கலக்[த்]துல் ஜின்ன வல் இன்ஸ இல்லா லியஃபுதூன்** என்று கூறியுள்ளான்.

ஆனால் பரிதாபம்! உலகில் வாழ்கின்ற பலர் வாலிப வயதை அடைந்தும் கூட தமது வாழ்வின் நோக்கத்தைப் புரியவில்லை. இறைவனை விட்டு விட்டு உலகத்தின் பக்கம் சாய்கின்றனர். உலகின் பொருள், கண்ணியம் இவற்றினால் பெரும் மன நிறைவுக்கு உள்ளாகி இருக்கின்றனர். இறைவனின் பங்கு மிகவும் குறைவாகவே உள்ளது. பலரின் உள்ளத்தில் (இறைவனைப் பற்றிய சிந்தனை) அறவே இல்லை. உலகிலேயே மூழ்கி மாய்ந்து போகின்றனர். இறைவன் ஒருவன் இருக்கிறான் என்ற செய்தி கூட அவர்களுக்கு தெரிவதில்லை.

தனது பிறப்பின் நோக்கத்தைப் புரிய வைக்கவும் அவனை எப்படி இபாதத் செய்ய வேண்டும் என்று கற்றுக் கொடுக்கவும் அல்லாஹ் உலகில் நபிமார்களை அனுப்பி வைக்கின்றான்.

அவர்கள் தமது சமுதாயத்திற்கு இபாதத் செய்யும் முறையையும் பிறப்பின் நோக்கத்தையும் கற்றுக் கொடுத்தனர். பிறகு மனிதன் ஒவ்வொரு தூதுச் செய்தியையும் புரிந்து கொள்வதற்கு தகுதி பெற்றதும் அவனது மன ஆற்றல் மேலும் வளர்ச்சி அடைந்தது. இபாதத்துகளின் உயர் தகுதிகளைப் புரியத் தொடங்கினான். உலகியல்ரீதியாக தொலைநோக்குப் பார்வையும் நல்லொழுக்க மேன்மையும் பெறத் தொடங்கினான். சமூகத்தில் ஒருவருக்கொருவரின் தொடர்பும் விரிவடைந்தது. அப்போது இன்ஸானே காமில் காத்தமுல் அன்பியா ஹஸ்ரத் முஹம்மத் முஸ்தஃபா (ஸல்) அவர்களை கடைசி ஷரீஅத்துடன் அல்லாஹ் அனுப்பினான். அவர்கள் அல்லாஹ்வின் கட்டளையைப் பெற்றவாறு அறிவித்தார்கள்.

**அல் யவ்ம அக்மல்[த்]து ல[க்]கும் தீன[க்]கும் வஅத்மம்[த்]து அலை[க்]கும் நிஃம[த்]தீ வரழீ[த்]து ல[க்]குமுல் இஸ்லாம [d]தீனா** – இன்று நான் உங்களுக்காக, உங்கள் மார்க்கத்தை முழுமையாக்கியுள்ளேன். மேலும் உங்களுக்கு என் அருளை நிறைவு செய்துள்ளேன். மேலும் உங்களுக்கு மார்க்கமாக இஸ்லாத்தை தேர்ந்தெடுத்துள்ளேன். (5:4)

அல்லாஹ்வுடைய நெருக்கம் பெறுவதற்கான வழியைக் கூறினார்கள். இபாதத்தின் உயர் தகுதியைத் தேர்ந்தெடுக்கும் வழியைக் கற்றுக் கொடுத்தார்கள். சமூக தொடர்புகளை பராமரிக்கும் வழிமுறைகளைக் கற்றுக் கொடுத்தார்கள். எதிரிகளுடன் நடந்து கொள்ளும் முறையையும் கற்றுக் கொடுத்தார்கள். சமுதாயத்தின் பலவீனமான பகுதிகளுக்கு வழங்க வேண்டிய உரிமைகளை வழங்கும் முறையை கற்றுக் கொடுத்தார்கள். பெண்களின் உரிமைகளை வழங்கும் முறையைக் கற்றுக் கொடுத்தார்கள். வருங்காலத்தில் கண்டுபிடிக்கப்படும் புதிய கண்டுபிடிப்புகளிலிருந்து எப்படி பயனடைய வேண்டும் என்றும் கற்றுக் கொடுத்தார்கள். வானங்கள், பூமியில் உள்ள கருவூலங்கள் தொடர்பாக மனிதனுடைய அறிவு, தொலைநோக்குப் பார்வை எவ்வளவு தூரம் செல்ல முடியுமோ அதுவரை செல்வதற்கு வழிகாட்டினார்கள். இன்றிலிருந்து 1400 ஆண்டுகள் முன்னர் வாழ்ந்த மனிதனால் புரிந்து கொள்ள முடியாத பல விஷயங்களை எடுத்துக் கூறினார்கள். அக்காலத்தில் அதனை மனிதனால் முற்றிலும் சிந்தித்துப் பார்க்க முடியாததாக இருந்தது. அது குறித்து இன்றும் மனிதன் ஆய்வு செய்து கொண்டுதான் இருக்கிறான். அதுமட்டுமல்ல, இன்னும் கூட வருங்காலத்தில் வரவிருப்பதைப் பற்றியும் கூட கூறியிருக்கிறார்கள்.

திருக்குர்ஆனில் கூறப்பட்ட இந்த அனைத்து விஷயங்களையும் ஒரு சாதாரண மனிதனால் புரிய இயலாதுதான் என்றாலும், அந்த முழுமையான மனிதராகிய காத்தமுல் அன்பியா ஹஸ்ரத் முஹம்மத் (ஸல்) அவர்கள் அப்போதே அதனை விளக்கிக் கூறியிருந்தார்கள். அல்லாஹ்வின் ஒளியால் முழுமையாக ஒளியூட்டப்பட்டிருந்தார்கள். சஹாபாக்களிடம் அன்னார் அந்த சஹாபிகளின் தகுதிக்கேற்ப அந்த ஒளியையும் நிரப்பிக் கொடுத்தார்கள். இபாதத்தின் வழிமுறையையும் கற்றுத் தந்தார்கள். அதன் உயர் தகுதியை சென்று

சேர்க்கவும் கவனமூட்டினார்கள். அவர்களுக்கு தமது பிறப்பின் நோக்கத்தை அடைய வைக்கவும் கவனமூட்டினார்கள்.

பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் ஒளியைப் பெற்று தமது தகுதிக்கேற்ப பரப்பவும் தொடங்கினார்கள். ஒரு விளக்கிலிருந்து இன்னொரு விளக்கு என வெளிச்சமூட்டிக் கொண்டே சென்றார்கள். சாதாரண மனிதர்களால் அக்காலத்தில் புரிய முடியாத பல விஷயங்களை அம்மக்களுக்கு சொல்லிக் கொடுத்தார்கள். முழுமையான வேதம் மூலம் கியாமத் வரை அந்த ஒளி வெளிச்சமூட்டிக் கொண்டே செல்லும். வருங்கால மூஃமின்களும் அவ்வொளியைக் காண்பர். ஓர் உலகியல் சிந்தனை உள்ள மனிதன் அதே கண்ணோட்டத்துடன் மட்டும் பார்ப்பார். ஆனால் ஒரு உண்மையான மூஃமின் தனது பிறப்பின் நோக்கத்தை அடைவதற்காக அதே கண்ணோட்டத்தில் பார்ப்பார். அல்லாஹ்வின் முன்னறிவிப்பிற்கேற்ப உருவானவை என்று அறிவார்.

மூஃமினின் பார்வை இந்த கண்டுபிடிப்புகளைப் பொறுத்தவரை உலகத்துடன் மட்டும் தொடர்புடையவை. ஆனால் ஒரு மூஃமின் உண்மையான ஒளியிலிருந்து பயன்பெற முயற்சி செய்வார். எல்லாரையும் விட மிகவும் அல்லாஹ்வுக்குப் பிரியமான நபி ஹஸ்ரத் முஹம்மத் (ஸல்) அவர்கள் அந்த ஒளியைக் கொண்டு வந்தார்கள். இவ்வாறு வழிகேடு இருட்டில் மூழ்கியுள்ள மக்கள் அந்த நபியின் ஒளியிலிருந்து பயன்பெற்றனர்.

ஒவ்வொரு மைதானத்திலும் உயர் தகுதியைத் தேர்ந்தெடுத்தனர். அதேபோன்று கியாமத் வரை அந்த நபியுடன் தொடர்பு கொள்பவர் இருள்களிலிருந்து ஒளியின் பக்கம் வெளியேறிக் கொண்டே செல்வார். உலகிலும் ஆகிரத்திலும் அல்லாஹ்வின் ஜன்னத்துகளுக்கு வாரிசாகிக் கொண்டே செல்வர்.

**அல்லாஹ் சூரா அத்தலாக் -ன் 12-வது வசனத்தில் கூறுகிறான்:**

**ரஸூலய் யத்லூ அலை(க்)கும் ஆயா(த்)தில்லாஹி முபய்யினா(த்)தில் லியு(kh)க்ரி ஜல்லஸீன ஆமனூ வஅமிலுஸ் ஸாலிஹா(த்)தி மினழ்ழுலுமா(த்)தி இலன்னூர். வமய்யுஃமிம் பில்லாஹி வயஃமல் ஸாலிஹய்யு(d)த்(kh)கில்ஹு ஜன்னா(த்)தின் தஜ்ரீ மின் தஹ்(த்)திஹல் அன்ஹாரு (kh)காலிதீன ஃபீஹா அ(b)பதா. (g)க(d)த் அஹ்ஸனல்லாஹு லஹு ரிஸ்(g)கா –** அத்தூதர் நம்பிக்கை கொண்டு நற்செயல்களைச் செய்பவர்களை (எல்லா வகையான) இருள்களிலிருந்து(ம்) ஒளியின்பால் கொண்டு வருவதற்காக, அல்லாஹ்வின் தெளிவான வசனங்களை அவர் உங்களுக்கு ஓதிக் காட்டுகின்றார். மேலும் அல்லாஹ்விடத்து நம்பிக்கை கொண்டு நற்செயலாற்றுபவரை, அவன் தோட்டங்களில் நுழையச் செய்வான். அவற்றிற்கிடையே ஆறுகள் ஓடுகின்றன. அவர்கள் அத்தோட்டங்களில் என்றென்றும் வாழ்ந்து வருவார்கள். நிச்சயமாக அல்லாஹ் அவருக்காக மிகச் சிறந்த உணவை வழங்கியுள்ளான். (65:12)

ஆகவே அல்லாஹ்வுடைய திருப்தியைப் பெற வேண்டும் எனில், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய முன்மாதிரி மற்றும் அவர்களுக்கு இறங்கிய போதனை ஆகியவற்றைப் பேண வேண்டும். அந்த போதனையின்படி நடக்க முயற்சி செய்வது மட்டும் ஒருவரை இருள்களிலிருந்து ஒளியின்பக்கம் கொண்டு வருகிறது. அல்லாஹ்வுடைய திருப்தியைப் பெற்றுத் தருகிறது. அந்த ஒளியிலிருந்து பங்கு பெறுவது ஈமானும் அஃமாலே சாலிஹாவும் செய்ய வேண்டும் என்ற நிபந்தனையை அல்லாஹ் வைத்துள்ளான். வெறுமனே நம்பிக்கை கொள்வது மட்டும் போதுமானதன்று. ஒரு மூஃமினுக்கு அஃமாலே சாலிஹா செய்வதன் பக்கம் அதிக கவனம் தேவை. மேலும் அவர் கட்டுப்படாமை தீமைகளிலிருந்து விலக வேண்டும்.

நான் முதலில் ஓதிய வசனத்தில் அல்லாஹ் கூறுகிறான். அல்லாஹ்வின் மீது ஈமான், அவனது ரஸூலின் மீது ஈமான், குர்ஆனின் மீது ஈமான் இவைதான் அந்த ஒளியில் உங்களை பங்குதாரர் ஆக்கும். அல்லாஹ் மனிதனது ஒவ்வொரு அமலையும் நன்கு அறிந்தவனாக இருக்கிறான். எந்த அமலை தனது

திருப்தியைப் பெறுவதற்காக மனிதன் செய்துள்ளான் என்பதை அவன் நன்கு அறிந்துள்ளான். ரஸுலின் முன்மாதிரியின்படி அமல் செய்ய எந்த அளவு மனிதன் முயற்சி செய்துள்ளான் என்பதனை நன்கு அறிந்துள்ளான். ஈமான் கொண்டிருப்பதாக வாதம் செய்வது வெறும் நாவளவிலா அல்லது உள்ளத்திலிருந்து கூறப்பட்டதா என்று நன்கு அறிகிறான். எனவே அல்லாஹ் மனிதனின் மீது பேருபகாரம் செய்தவனாக ஒரு நபியை அனுப்பினான். அவரது போதனையின்படி அமல் செய்வதில்தான் மனிதனது நிலைப்புத்தன்மை உள்ளது. மூஃமினாக இருப்பதாக வாதம் செய்பவருக்கு இந்த போதனையை தன் மீது போட்டுக் கொள்வது கடமையாகிறது. அது முழுமையானதும் முழுமையாக்கக் கூடியதுமான போதனையாகும்.

பிறகு அல்லாஹ்வுடைய இந்த தொடர் பேருபகாரத்தை பாருங்கள்! **ஆ(kh)கரீன மின்ஹும் – அவர்களுடன் சேராத மற்றவர்களுக்கிடையிலும் (62:4)** என்று சொல்லி ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மற்றும் திருக்குர்ஆனின் ஒளியூற்று தொடரக்கூடியது என்று விளக்கினான்.

இருளின் காலத்திற்குப் பிறகு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடைய ஒளியிலிருந்து மிக அதிகமாக பங்குபெறக்கூடியவராகிய ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடைய உண்மை பேரன்பராகிய **மஸீஹ் மஹ்தி** வரவேண்டியிருந்தது. அவர் மூலம் பிறகு மீண்டும் இருள்களிலிருந்து ஒளியின் பக்கம் வழிகாட்டல் உருவாகும்.

வரக்கூடிய மஸீஹ் மவ்வூது மற்றும் மஹ்தி மவ்வூது இந்த உம்மத்திலும் மற்ற சமுதாயத்திலும் காணப்படும் தவறான கொள்கையாகிய இருளிலிருந்து ஒளியின் பக்கம் வெளியேற்ற வேண்டியிருந்தது. எவர் அவருடன் இணைந்திருப்பாரோ, அவரை ஏற்றுக் கொள்வாரோ அவருடன் உண்மையான தொடர்பு வைப்பாரோ அவர் உலகின் வீணானவற்றிலிருந்து தப்பித்து அவருடன் செய்த ஒப்பந்தத்தை பேணுபவராக இருப்பார். பிறகு அல்லாஹ்வுடைய அருள்களை ஈர்த்தவாறு ஜன்னத்தின் நற்செய்தியைக் கேட்பார்.

ஓர் அஹ்மதிக்கு இதுகேட்டு ஆறுதல் ஏற்படுகிற அதே வேளையில் ஒரு கவலையும் உண்டு. தம்மை ஆய்வு செய்ய வேண்டிய தேவையும் உள்ளது. அந்த ஒளியில் இருந்து பங்குபெறுவதற்கு, அல்லாஹ்வின் மீது ஈமான் கொண்டு நற்செயல்கள் செய்வார் என்ற நிபந்தனையையும் (அல்லாஹ்) வைத்துள்ளான். எனவே எப்போதும் கவனத்தில் கொள்ளத்தக்க விஷயம் என்னவென்றால், எந்த அமல் சாலிஹானது? எந்த அமல் சாலிஹ் அல்லாதது? என்பதாகும்.

சில சின்ன சின்ன விஷயங்கள் வெளிப்படையாகத் தெரிபவை. உதாரணமாக மகிழ்ச்சிகள். மகிழ்ச்சியைக் கொண்டாடுவதற்குரிய வரம்புகள் என்ன? துக்கத்தை கடைபிடிப்பதற்கு வரம்புகள் என்ன? மகிழ்ச்சியும் துக்கமும் மனிதனுடன் பிணைக்கப்பட்டுள்ளன? சில வரம்புக்கு உட்பட்டவை. சில நிபந்தனைக்கு உட்பட்டவை.

இன்று முஸ்லிம்களைப் பாருங்கள். காலத்தின் தாக்கத்திற்குள்ளாகி மகிழ்ச்சி கொண்டாடும் வேளையில் வீணான காரியங்களைச் செய்கின்றனர். அதேபோன்று துக்கங்களின் வேளையிலும் விதவிதமான பித்அத்துகளை செய்து விடுகின்றனர். சடங்குகளைச் செய்கின்றனர். ஆனால் ஓர் அஹ்மதி தாம் செய்கின்ற ஒவ்வொரு பணியிலும் ஏதாவது பயன் தென்பட வேண்டும். ஒவ்வொரு அமலையும் அல்லாஹ் மற்றும் ரஸுலினால் உருவாக்கப்பட்ட வரம்புகளுக்கு உட்பட்டு செய்ய வேண்டும். நான் மகிழ்ச்சி, துக்கம் பற்றி குறிப்பிட்டேன். மகிழ்ச்சிகளுள் பெரும் மகிழ்ச்சியாக திருமண நிகழ்ச்சி கருதப்படுகிறது. சில சஹாபாக்கள் தாம் திருமணம் செய்யாமல் இருக்க விரும்பிய போது ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கண்டித்தார்கள். எனது சுன்னத்தின் படி அமல் செய்வதே நற்செயலாகும் என்றார்கள். நான் திருமணமும் செய்துள்ளேன். நோன்பும் வைக்கிறேன். இபாதத்துகளும் செய்கின்றேன். அவர்களின் இபாதத்தின் தகுதி நமது கற்பனைக்கு அப்பாற்பட்டது.

ஒரு முஸ்லிமுக்கு எந்த தடையும் இல்லையெனில் அவர் கண்டிப்பாக திருமணம் செய்ய வேண்டும். பாகிஸ்தான், இந்தியா போன்ற பகுதிகளில் இவ்விஷயத்திலும் பல சடங்கு சம்பிரதாயங்கள் காணப்படுகிறது.

அந்த சடங்குகளுக்கும் இஸ்லாத்திற்கும் எந்தத் தொடர்பும் இல்லை. சில பகுதிகளில் இந்த சடங்குகள் எந்த அளவுக்கு தாம் தூம் என்று கொண்டாடப்படுகின்றன என்றால், இது திருமணத்தின் கடமைகளுள் ஒன்று என்றும், இந்த சடங்குகள் இல்லாமல் திருமணம் நடக்கவே முடியாது என்றும் கருதப்படுகின்றன.

மெஹந்தி சடங்கு (மருதாணி வைக்கும் சம்பவம்) அதுபோன்ற ஒரு முக்கிய சடங்கு ஆகும். இதற்காக மேடைகள் அமைக்கப்பட்டு பல நாள்களுக்கு இது கொண்டாடப்படுகின்றது. திருமணத்திற்கு முன்பிருந்தே ஆரம்பமாகி விடுகின்றன. சில இடங்களில் பல வாரங்கள் முன்பே தொடங்கி விடுகின்றது. பிறகு இன்று எவ்வளவு விருந்து சமைக்கப்பட்டது? என்று பேசப்படுகிறது. வசதியில்லாதவர்களையும் கூட இந்த சடங்குகள் தமது பிடியில் எடுத்துக் கொண்டு விட்டன. இதனால் வசதியில்லாதவர்கள் கடன் சுமைக்கு உள்ளாகின்றனர். அஹ்மதி அல்லாதவர்கள் தான் இதனை செய்து வந்தனர். ஆனால் இப்போது சில அஹ்மதி வீடுகளிலும் கூட இந்த சடங்குகள் நடைபெறுகின்றன. சில அஹ்மதி குடும்பங்கள் மிகப் பெரிதாக செய்கின்றனர். ஆனால் காலத்தின் இமாமை ஏற்றுக் கொண்டவர்கள் இந்த சடங்குகளில் இருந்து தப்பியிருக்க வேண்டும். ஆனால் சமூகத்தின் பின்னால் போகின்றனர். சில மாதங்கள் முன்பு இந்த சடங்குகள் சம்பந்தமாக கவனமூட்டினேன். மருதாணி சடங்குக்காக பெரும் செலவு செய்து விருந்து வைக்கப்படுகின்றது. அதனை நாம் நிறுத்த வேண்டும்.

இங்கு இலண்டனில்கூட ஒரு அஹ்மதி வீட்டில் மருதாணி சடங்குக்கு ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தது. எனது குத்பாவைக் கேட்டு விட்டு அவர் அவ்விருந்தை cancel செய்து விட்டார். மனப்பெண்ணின் சில தோழிகளை மட்டும் அழைத்து விருந்தளித்தார். சமைக்கப்பட்ட பெரிய விருந்தை அன்றைய தினம் பைத்துல் புதூஹ் -ல் நடைபெற்ற ஒரு function -க்காக கொடுத்து விட்டார். இதுவே ஓர் அஹ்மதியின் எதிர்நடவடிக்கையாகும். கவனமூட்டப்பட்டவுடனே நடைமுறைப்படுத்துகிறார். அதற்குப் பிறகு மன்னிப்புக் கடிதமும் எழுதுகிறார். எனக்கு சில புகார்கள் பாகிஸ்தானிலும் ரப்வாவிலும் இருந்து கிடைத்துள்ளன. சிலர் அளவுக்கு அதிகமாக இந்த சடங்குகளில் மூழ்கியுள்ளனர். ரப்வா சிறிய ஊர் என்பதால் எந்த விஷயமும் உடனே வெளியே தெரிந்து விடுகிறது. எனவே நான் பகிரங்கமாகவே கூறுகிறேன். இந்த வீணான சடங்குகளுக்கு பின்னால் போகாதீர்கள். இதனை நிறுத்துங்கள்.

**<u>ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:</u>**

திருமணத்திற்கு நூற்றுக்கணக்கான ரூபாய்களை செலவழிக்கும் தீய வழக்கம் நம்மிடையே நிலவுகிறது. அக்காலத்தில் - இன்றிலிருந்து 100 ஆண்டுகளுக்கு முன் நூற்றுக்கணக்கில் செலவழிப்பதே பெரும் செலவாகும்.

ஆனால் இன்று நூறு என்ன? இலட்சங்களில் செலவு செய்யப்படுகிறது. தகுதிக்கு மேல் செலவு செய்யப்படுகின்றது. தேவைக்கு அதிகமாக விளக்குகள் போடப்படுகின்றது. அது ஹராமாகும் என்று ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்.

ஒருபுறம் பாகிஸ்தானில் ஒவ்வொரு நாளும் மின்சாரப் பற்றாக்குறை நிலவுவதாக செய்தி வருகிறது. பல மணி நேரம் மின் இணைப்பு துண்டிக்கப்படுகின்றது. விலைவாசியும் இடுப்பை முறிக்கின்றது. இன்னொரு புறம் சில வீடுகள் வீண் விரயம் செய்யும் விதத்தில் நாட்டுக்கு நஷ்டத்தை ஏற்படுத்துவது மட்டுமின்றி பாவத்திற்கும் உள்ளாகின்றனர்.

எனவே பாகிஸ்தான் மக்கள் வீண் செலவு செய்வதில் இருந்து விலகுங்கள். குறிப்பாக ரப்வாவில் இவ்விஷயத்தில் குறிப்பாக கவனம் செலுத்தப்பட வேண்டும். ஜமாஅத் அதனை கண்காணிக்க வேண்டும். திருமண வைபவங்களில் தேவைக்கு அதிகமாக காட்டுவதற்காகவும், பெருமைக்காகவும் பைசாவை செலவு செய்யக் கூடாது

அல்லாஹ்வின் சிறப்பான அருளால் ஜமாஅத், துக்க வேளையில் செய்யப்படும் பல தீய சடங்குகளிலிருந்து தப்பியுள்ளது. ஏழாவது நாள், பத்தாவது நாள், நாற்பதாவது நாள் போன்ற சடங்குகள்

எல்லாம் (மரணத்தை ஒட்டி) செய்யப்படுவதில்லை. இந்த சடங்குகள் பெரும்பாலும் வீட்டினருக்கு சுமையாகவே இருக்கின்றன. ஆனால் சமுதாயத்தின் தாக்கத்தால் பீடிக்கப்பட்டவர்களாக மற்ற வகை சடங்குகளில் வீழ்ந்து விட சாத்தியம் உண்டு. எனவே அஹ்மதிகள் தமது தகுதியை புரிந்து கொள்ள வேண்டும். அல்லாஹ் அவர்கள் மீது கருணை காட்டி மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் ஜமாஅத்தில் இணைத்துள்ளான். இப்போது சரியான இஸ்லாமிய போதனையின் படி அமல் செய்வது கடமையாகும். திருமண நிகழ்ச்சிகளுக்காக ஒரு விழா நடத்தலாம். அவரிடம் சக்தி இருக்குமானால் ஒரு விருந்தும் நடத்தலாம். அதுவும் கூட வரக்கூடிய ஒவ்வொருவருக்கும் விருந்து கொடுத்தாக வேண்டும் என்பது கூட கண்டிப்பு இல்லை. தூரத்திலிருந்து வருபவர்களுக்கு மட்டும் கூட விருந்து அளிக்கலாம். நாட்டின் சட்டம் தடுக்கும் என்றால் விருந்தை நிறுத்தி விட வேண்டும். வீட்டில் உள்ளவர்கள் மட்டும் சமைத்து உண்டு கொள்ளலாம். ஏனெனில் பாகிஸ்தானில் ஒரு நேரத்தில் இந்த கட்டுப்பாடு விதிக்கப்பட்டிருந்தது. இப்போது அந்த சட்டம் எப்படி உள்ளது என்று எனக்கு தெரியாது. ஆனால் ஓரளவுக்கு இப்போதும் கூட கட்டுப்பாடு உள்ளது. அடுத்து வலிமா. இது அசல் கட்டளையாகும். தமது நெருக்கத்தில் உள்ளவர்களை அழைத்து ஒரு விருந்து வைக்க வேண்டும். இஸ்லாத்தில் கூறப்பட்ட திருமண விருந்து இது ஒன்றுதான். ஆனால் இதுவும் கூட பெரிய அளவில் நடத்த வேண்டும் என்று கூறப்படவில்லை. ஒருவர் தமது வசதிவாய்ப்பிற்கேற்ப மக்களை அழைத்து விருந்தளிக்கலாம். நான் ஏற்கனவே கூறியது போன்று இறைவன் நமது பிறப்பின் நோக்கத்தை கூறி விட்டான். ஒவ்வொரு நற்செயலும் இறை திருப்தி பெறுவதற்காகவே செய்யப்படுகின்றது. அவ்வாறு செய்யப்படும் போது அதுவும் ஓர் இபாதத் ஆகி விடுகிறது. இதனை கவனத்தில் கொள்ளும் போதுதான், அதில்தான் நமது நிலைப்புத்தன்மை உள்ளது. அதன் பிறகு நாம் இந்த சடங்குகளில் இருந்து தப்பி விடலாம். பித்அத்துகளிலிருந்து தப்பி விடலாம். வீண் செலவுகளை தவிர்த்து விடலாம். வீணானவற்றிலிருந்து தப்பி விடலாம். அநீதியிலிருந்து தப்பி விடலாம். இந்த சடங்கு சம்பிரதாயங்களை ஒரு மனிதன் தன்னையும் அறியாமலேயே தனது உயிருக்கு இழைக்கும் அநீதியாகக் கூட அவை சில வேளைகளில் அமைந்து விடுகின்றன. பிறகு சமுதாயத்தின் நடப்புகளை பார்த்து ஏழைகளும் அதனை செய்கின்றனர். இதுவும் திருமண கடமைகளுள் ஒன்று என்று நினைக்கின்றனர்.

எந்த சமூகத்தில் இந்த சடங்கு சம்பிரதாயங்கள் பித்அத்துகள், வீணானவைகள் இருக்குமோ அந்த சமுதாயம் பிறகு அடுத்தவரின் உரிமையை பறிக்கத் தொடங்குகிறது. பிறகு நான் கூறியது போன்று ஒரு சமுதாயம் மற்ற சமுதாயத்தின் மீது அநீதி இழைக்கத் தொடங்குகிறது. நாம் இவற்றிலிருந்து விலகி விட்டால் பிறர் உரிமையைப் பறித்தல் அநீதி இழைத்தலிலிருந்தும் தப்புவோம். அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுபவர்கள் ஆவீர்கள். இன்று அஹ்மதியை விட அதிகமாக வேறு யார் அடுத்தவரின் உரிமையைப் பறிக்காதீர்கள் என்று முழக்கமிடுகிறார்? இன்று அஹ்மதியைத் தவிர வேறு யார் சடங்குகளைப் பின்பற்றுவதை மட்டும் மன உணர்வுகளைப் பின்பற்றுவதை விட்டும் விலகுவதாக உறுதி எடுத்துள்ளார்?

திருக்குர்ஆன் ஷரீஃபின் கட்டளையை முற்றிலும் என் தலை தாங்கி ஏற்பேன் என்று அஹ்மதிகளை தவிர வேறு யார் உறுதி எடுத்துள்ளார்?

அல்லாஹ்வின் கூற்றையும் ரஸூலின் கூற்றையும் எனது ஒவ்வொரு செயலிலும் அமல்படுத்துவதாக அஹ்மதியைத் தவிர வேறு யார் உறுதி எடுத்துள்ளார்?

அஹ்மதிகளே, அல்லாஹ் அவனது ரஸூலிடமிருந்து அருள் பெறுவதற்காக காலத்தின் இமாமின் கையில் ஓர் உறுதிமொழி எடுத்து பைஅத் நிபந்தனைகளில் நுழைந்துள்ளனர். பிறகு உறுதிமொழியை முன் வைத்து நடப்பது அவசியமாகும். இந்த உறுதிமொழியைப் பின்பற்றுவதன் மூலம் ஷய்த்தானின் கட்டுப்பாட்டிலிருந்து விலகி வருகின்றனர். தனது பாதுகாப்பிற்காக ஏற்பாடு செய்கின்றனர். தமது புரியும் திறன் தொலைநோக்குப் பார்வையை கூர்மையாக்குகின்றனர். தமது கண்ணியத்தை பாதுகாக்கின்றனர். தமது வெட்கத்தின் தகுதியை உயர்த்துகின்றனர். பொறுமை தன்னிறைவு ஆகியவற்றை தம்மிடத்தில் உருவாக்க முயற்சி செய்கின்றனர். தமக்குள் தக்வாவின் வழி உணவை உருவாக்க முயற்சி செய்கின்றனர். தமது

ஈமானில் உறுதியை உருவாக்குகின்றனர். தமது அமானிதத்தின் ஹக்கை நிறைவேற்ற முயற்சி செய்கின்றனர். அல்லாஹ்வுடைய அச்சம், அன்பு, இதன் உயர் தரத்திற்கு சென்றவாறு பிறப்பின் நோக்கத்தை அடைய முயற்சி செய்கின்றனர். ஆகவே இருள்களிலிருந்து ஒளியின் பக்கம் வெளியேறுகின்றனர். ஒளியைப் பெற்று காலத்தின் இமாமிடம் பைஅத் செய்ததன் ஹக்கை நிறைவேற்ற வேண்டும். உலகவாதிகளின் விஷயங்களை விட்டுவிட வேண்டும். தமக்குள் தூய மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும். தம்மைத்தாமே உயரிய நல்லொழுக்கம் பெறுவதற்கு முயற்சி செய்ய வேண்டும். வெட்கத்தின் தரம் உயர வேண்டும் என்று நான் குறிப்பிட்டேன். வெட்கம் என்பது ஈமானின் ஒரு பகுதியாகும். நான் ஆரம்பத்தில் கூறியது போன்று உலகியல் கண்டுபிடிப்புகளாக தொலைக்காட்சி, இன்டர்நெட் போன்றவை வெட்கத்தின் இலக்கணத்தையே மாற்றி விட்டன. பகிரங்கமான வெட்கக்கேட்டை காட்டி விட்டு இது வெட்கக் கேடல்ல என்று கூறுகின்றனர். ஓர் அஹ்மதி தொலைக்காட்சி, இன்டர்நெட் பார்ப்பதை வெட்கத்தின் இலக்கணமாக எடுக்க வேண்டாம். அது வெட்கத்தின் அளவுகோல் அல்ல. அது மன இச்சையின் பிடியாகும். பர்தாவை பேணாததன் மூலம் சில நல்ல அஹ்மதி குடும்பத்தினர் கூட வெட்கத்தின் இலக்கணத்தை மாற்றி வைத்துள்ளனர். சமுதாய முன்னேற்றத்தின் பெயரால் சில காரியங்கள் செய்யப்படுகின்றன. அவற்றையெல்லாம் ஒரு நல்ல அஹ்மதி பார்க்கவே முடியாது.

கணவன் மனைவியாகவே இருப்பினும் சில செயல்களை மற்றவர்கள் முன் செய்வது அனுமதியற்றது மட்டுமின்றி பாவமும் ஆகும். அஹ்மதி வீட்டினர் இந்த தீய செயல்களிலிருந்து தம்மை தூய்மையாக்கிக் கொள்ளவில்லை எனில் தனது ஈமானையும் பாதுகாக்கவில்லை. இக்காலத்தின் இமாமின் கையில் செய்த உடன்படிக்கையையும் பாதுகாக்கவில்லை.

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மிகத் தெளிவாக கூறியுள்ளார்கள்:

வெட்கம் ஈமானின் ஒரு பகுதியாகும். எனவே இதனை ஒரு அஹ்மதி முஸ்லிம் கவனத்தில் கொள்ள வேண்டும். இக்காலத்தில் நடைபெறும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளின் மூலம் ஈமானையும் கூட நழுவவிட்டு விடுவார்கள். இந்த தொடர்ச்சியான தீமையின் தாக்கத்தின் விளைவால் அவர்களிடம் வெளிப்படும் சில செயல்களால் ஜமாஅத்தை விட்டு வெளியேற்றவும் வேண்டி வருகிறது. எனது ஒவ்வொரு பணியும் இறை திருப்தியைப் பெறுவதற்காகவே என்ற எண்ணம் வர வேண்டும்.

ஒரு ஹதீஸில் வருகிறது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

வெட்கக்கேடான காரியங்கள், அதனைச் செய்பவரை மோசமான அசிங்கமான மனிதனாக்கி விடுகிறது. வெட்கம், வெட்கம் உள்ளவருக்கும் அழகான வாழ்க்கையை வழங்குகிறது. அழகிய தோற்றத்தை வழங்குகிறது. இந்த தோற்றம்தான் மனிதனுக்குள் நற்செயல் செய்வதற்கு தூண்டுதல் ஏற்படுத்துகிறது.

ஒரு ஹதீஸில் வருகிறது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

அல்லாஹ்வைப் பற்றிய பயம் உள்ளத்தில் வேண்டும். அதுவும் பயப்பட வேண்டிய அளவுக்கு பயம் இருக்க வேண்டும். இதனைக் கூறியதும் சஹாபாக்கள், அல்லாஹ்வுக்கு நன்றி. அவன் நமக்கு அவ்வெட்கத்தை தந்துள்ளான் என்றார்கள். உடனே ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள், ஏன் இருக்காது? ஒரு மனிதருக்கு வெட்கம் இருந்தால் அவரது தலை உருவாக்கும் பல தீய செயல்களிலிருந்து அதுவே அவரை காப்பாற்றி விடும் என்றார்கள். ஒருவர் மறு உலக வாழ்க்கையை கவனிக்கும் போது உலக அலங்காரங்களை விட்டு விடுகிறார். எவர் இத்தகைய வாழ்க்கை வாழ்வாரோ அவரோ உண்மையில் இறையச்சம் உள்ளவர் ஆவார்.

உள்ளத்தில் வரும் ஒவ்வொரு எண்ணத்தையும் அல்லாஹ்வின் மீது கொண்ட வெட்கத்தால் உடனே அதனை உள்ளத்திலிருந்து களைந்துவிட வேண்டும். இஸ்திக்ஃபார் மூலம் அதனை செய்ய வேண்டும். எண்ணங்கள் தூய்மையாக இருந்தால் அமலும் தூய்மையாக இருக்கும். வீணானவை அம்மனிதனிடம் எந்த தாக்கத்தையும் ஏற்படுத்தாது. அதுபோன்று மனிதன் தனது வாழ்வாதாரத்தையும் ஹலாலான முறையில்

சம்பாதிக்க வேண்டும். எனவே முயற்சி செய்து சம்பாதியுங்கள். பிறரது சம்பாத்தியத்தில் பார்வையை செலுத்தி அதனை பிடுங்க முயற்சி செய்யாதீர்கள். அல்லது தவறான வழியில் சம்பாதிக்க முயற்சி செய்யாதீர்கள்.

பாகிஸ்தான் போன்ற நாடுகளில் இலஞ்சம் மிகவும் சாதாரணமானது. ஆனால், இவ்வனைத்தும் ஹராமாகும். எனவேதான் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். வயிற்றை எதனைக் கொண்டு நிரப்புகிறோமோ அதனையும் பாதுகாக்க வேண்டும். அனுமதிக்கப்பட்ட வருமானம் மூலம் உங்கள் வயிற்றையும் உங்களது மனைவி மக்களின் வயிற்றையும் பாதுகாக்க வேண்டும். அவர்களே அல்லாஹ் மற்றும் அவனது ரஸூலின் மீது உண்மையான ஈமானுள்ளவர்கள் ஆவர்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் அல்லாஹ்வைப் பெறுவதற்காக ஒரு துஆ செய்தார்கள்.

வல்லமைமிக்க இறைவனே! எனது அன்பிற்குரிய வழிகாட்டியே! உண்மையாளர்களும் தூயவர்களும் பெற்ற வழியை எனக்கு காட்டுவாயாக! மன இச்சைகளின் பக்கம் அழைக்கும் அழைப்பாளர்களின் வழியிலிருந்து பாதுகாப்பாயாக! காழ்ப்புணர்ச்சி, பொறாமையிலிருந்து பாதுகாப்பாயாக!

எனவே நமது உறுதிமொழியை பேணியவர்களாக பைஅத்தின் தத்துவத்தை உணர்ந்தவாறு உண்மையாகவே ஈமான் கொண்டவர்களில் இணைவோமாக. எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும். நாம் ஒரு நபியை ஏற்றுக் கொண்டிருக்கிறோம். அவர் நமக்கு சரியான வழிகளைக் காட்டியுள்ளார். நன்மை தீமையின் வித்தியாசத்தை புரிய வைத்தார். இதன் பிறகும் நாம் உலகியல் காரியங்களில் மூழ்கி, சடங்கு சம்பிரதாயங்களில் மூழ்கி வீணான சடங்குகளில் பொறுப்பை தமது கழுத்தில் போட்டுக் கொள்வோம் எனில் நம்மால் இபாதத்தின் ஹக்கையும் நிறைவேற்ற முடியாது. ஒளியிலிருந்து பங்கும் பெற முடியாது.

**குர்ஆன் கரீமில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் பற்றி அல்லாஹ் கூறுகின்றான்:**

**யஃமுருஹும் பில்மஃரூஃபி வயன்ஹாஹும் அனில் முன்கரி வயுஹில்லு லஹுமுத் தய்யிபா[த்]தி வயுஹர்ரிமு அலைஹிமுல் [kh]கபாயிஸ வயழஉ அன்ஹும் இஸ்ரஹும் வல் அ[gh]க்லாலல்ல[த்]தீ கானத் அலைஹிம் – இத்தூதரைப் பின்பற்றுவோருக்கு நன்மை செய்யுமாறு அவர் கட்டளையிடவும், தீமையிலிருந்து அவர்களைத் தடுக்கவும் செய்கின்றார். மேலும் நல்லவற்றை அவர்களுக்கு அனுமதிக்கவும், தீயவற்றை அவர்களுக்கு விலக்கவும் செய்கின்றார். மேலும் அவர்களின் (மேலிருந்த) சுமையையும், அவர்களின் கழுத்துகளில் போடப்பட்டிருந்த விலங்குகளையும் அவர்களை விட்டு அவர் அகற்றுகின்றார். (7:158)**

இந்த நபி நன்மைகளை உங்களுக்கு ஏவுகின்றார். தீயவற்றைத் தடுக்கின்றார். உங்களுக்காக தூய்மையானவற்றை ஹலாலாக்குகின்றார். தன்மீது ஈமான் கொண்டவர்களுக்கு தூய்மையற்ற பொருள்களை ஹராமாக்குகிறார். அவர்களின் சுமையை அவர்களை விட்டு அகற்றுகின்றார். அதாவது முன்னுள்ள சமுதாயங்களின் தோள்களில் கிடந்த சுமைகளை நம்மிடமிருந்து இறக்குகின்றார். அவர்கள் தங்களது மார்க்கத்தை மறந்து விட்டு தங்களால் உருவாக்கப்பட்ட சடங்கு சம்பிரதாயங்களில் மூழ்கி விட்டனர்.

இந்த விஷயங்கள் நம்மிடமும் உள்ளது. நாம் இக்காலத்தில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடைய தூதுச் செய்தியை எடுத்து வைக்கும் பொறுப்பை எடுத்து இருக்கிறோம் எனில் இந்த வீண் சுமைகளை நம்மை விட்டு இறக்கி விட வேண்டும்.

எனவே நாம் ஏற்றுக் கொண்டிருக்கிற நபி, நமக்கு ஹலால், ஹராமை விளக்கி, மார்க்கம் தொடர்பான தவறான கொள்கைச் சுமைகளை நமது கழுத்திலிருந்து இறக்கியுள்ளார்கள். ஆனால் நான் ஏற்கனவே கூறியது போன்று முஸ்லிம்களின் துர்பாக்கியம் இந்த தெளிவான கட்டளைகள் இருந்தும் கூட சிலர் வீண் சுமைகளை தமது கழுத்துகளில் போட்டுக் கொண்டுள்ளனர். அஹ்மதிகள் பைஅத் செய்த பிறகு இந்த தத்துவத்தை திரும்பவும் புரிய முயற்சி செய்யுங்கள். இந்த சுமையை நமது கழுத்திலிருந்து எப்படி இறக்குவது?

அல்லாஹ்வுக்கு நன்றி கூற வேண்டும். நாம் கபர்களில் ஸஜ்தா செய்வதிலிருந்து நாம் பாதுகாக்கப்பட்டுள்ளோம். பீர் வணக்கத்திலிருந்து பொதுவாக விலகியுள்ளோம். ஆங்காங்கே அவ்வப்போது அது மாதிரி புகார்களும் வரவே செய்கின்றன. பொதுவாக சடங்கு சம்பிரதாயத்திலிருந்து நாம் விலகியே இருக்கிறோம். இருந்தும் நான் கூறுவது போன்று சில காரியங்கள் நமக்கு காணக்கிடைக்கின்றன. எனவே நாம் கவனமற்றுப் போய் விட்டால், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் நமது கழுத்தில் இருந்து இறக்கிய அச்சுமைகள் மீண்டும் நமது கழுத்திற்கு ஏறி விடும்.

பிறகு மீண்டும் இக்காலத்தில் அந்த சுமையை இறக்கி விடுமாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் நமக்கு போதனை செய்துள்ளார்கள். அதனால் நாம் மார்க்கத்தில் இருந்து விலகிப் போய் விடுவோம். அந்நிலை ஏற்பட்டால் பிறகு ஜமாஅத்தை விட்டும் வெளியில் போய் விடுவோம் என்பது வெளிப்படையாகும்.

அல்லாஹ், ரஸூல் மற்றும் அவனது வேதத்திலிருந்து பங்கு பெறுபவரும் அந்த ஒளியிலிருந்து பங்கு பெறுபவருமே ஜமாஅத்தில் இணைந்திருக்க முடியும். அல்லாஹ் அவனது ரஸூல் மற்றும் வேதத்திலிருந்து பங்கு பெறாதவர் ஒளியிலிருந்தும் பங்கு பெறாதவர்கள் ஆவர். எவர் நூர் – லிருந்து ஒளியைப் பெற முயற்சி செய்வதில்லையோ அவர் ஈமானை விட்டும் வெளியில் போய் விடுகிறார். எனவே எப்போதும் நமது நிலைமைகளைப் பற்றி ஆய்வு செய்ய வேண்டும். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் தாமே ஒரு நூர் ஆவார்கள். வானத்திலிருந்து முழுமையான நூர் அவர்கள் மீது இறங்கியது. அவர்கள் இவ்வாறு துஆ செய்கிறார்கள்.

அல்லாஹ்வே! எனது உள்ளத்தையும் மற்ற உறுப்புகளையும் ஒளிமயமாக்குவாயாக!

இந்த துஆ உண்மையில் நமக்கு கற்றுத் தரப்பட்டதாகும். ஒவ்வொரு வேளையிலும் நமது சிந்தனைகள், உறுப்புகள், மூளை ஆகிய எல்லாவற்றையும் அல்லாஹ்வின் போதனைகளுக்கேற்ப செயல்படுவதற்கு முயற்சி செய்ய வேண்டும். அதற்காக துஆ செய்ய வேண்டும். மனமும் தூய்மையாக இருக்க வேண்டும். அமல் அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுவதற்கு ஏற்றதாக இருக்க வேண்டும். அல்லாஹ் நமது ஈமானில் உறுதியாக்குபவர்களாகவும், அல்லாஹ் அவனது ரஸூலின் கூற்றை அமல்படுத்துபவராகவும் தீய சடங்கு சம்பிரதாயங்களிலிருந்து தப்பிப்பவராகவும், உலக இச்சைகளிலிருந்து விலகுபவர்களாகவும் அல்லாஹ்வின் ஒளியிலிருந்து எப்போதும் பங்கு பெறுபவராகவும் ஆக்குவானாக. எந்த துர்பாக்கியமும் நம்மை அந்த ஒளியிலிருந்து விலக்கி விடாதிருக்கட்டுமாக.

★ ★ ★ ★ ★

JUMUA KUTHBA
**HADHRAT KHALIFATUL MASIH V**
AT BAITUL FUTUH MOSQUE, LONDON
ON 15.01.2010

Translated by : **Maulavi M. NIZAMUDEEN**
Published by : **MAJLIS KHUDDAMUL AHMADIYYA**
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
**TELEFAX : 0462 - 2352456**